# குழந்தைகளுக்கு வேதாகமம்

வழங்குபவர்

# நாற்பது வருடங்கள்



எழுதியவர்: Edward Hughes

சித்தரிப்பவர்: Janie Forest; Alastair Paterson

தழுவியவர்: Lyn Doerksen

மொழிபெயர்ப்பாளர்: Rev. Dr. Dasan Jeyaraj

உருவாக்குபவர்: Bible for Children
www.M1914.org

©2022 Bible for Children, Inc.
உரிமம்: இந்த கதையை நகலெடுக்கவோ, அச்சிடவோ அனுமதி
உண்டு ஆனால் இதை விற்பதற்கு அனுமதி இல்லை.



தேவன் இஸ்ரவேல் ஜனங்களை எகிப்திலிருந்து மீட்டு எடுத்தபோது, மோசே அவர்களை ஆராதனை செய்வதில் வழி நடத்தினான். அவன் ஒரு துதியின் பாட்டை ஏற்படுத்தினான். "கர்த்தரைப்பாடுங்கள் அவர் வெற்றி சிறந்தார்!" தேவன் இஸ்ரவேலுக்குச் செய்த மகத்தான காரியங்களை மோசே பாட்டாகப் பாடினான்.



வனாந்தரத்தில் மூன்று நாட்களுக்குப் பின்னர் தாகமாயிருந்த ஜனங்கள் ஒரு குளத்தைக் கண்டார்கள். ஆனால் கசப்பாயிருந்த தண்ணீரை அவர்களால் குடிக்கமுடியவில்லை.



ஜெபிப்பதற்கு பதிலாக, ஜனங்கள் முறுமுறுத்தார்கள். தேவன் அவர்களுக்கு தயவு பண்ணினார். அந்த தண்ணீரை நல்லத் தண்ணீராக அவர் மாற்றினார்.





ஜனங்கள் எதற்கெடுத்தாலும்முறுமுறுத்ததாக தெரிகிறது. "எகிப்திலே எங்களுக்கு நல்ல உணவு இருந்தது. இந்த வனாந்திரத்திலோ, நாங்கள் பட்டினியாய் சாகிறோம்," என்று அழுதார்கள். அந்த இரவிலே தேவன் காடை என்ற பறவைகளை அனுப்பினார். அதை சுலபமாக ஜனங்கள் பிடித்தார்கள்.

மறுநாள் காலையில் தேவன் மன்னாவை அனுப்பினார். அதின் ருசி தேனிட்ட பணிகாரத்திற்கு ஒப்பாயிருந்தது. ஒவ்வொரு நாள் காலையிலும் ஜனங்கள் சேகரிப்பதற்காக தரையிலே கிடந்தது.



இந்த விதமாக தேவன் வனாந்திரத்திலே தேவன் ஜனங்களைப் போஷித்தார்.

ஒவ்வொரு நாளும் புதிய உணவிற்காக அவர்கள் தேவனை நம்பவேண்டியதாயிருந்தது. ஒரு நாளைக்கு அதிகமாக வைத்தால் கெட்டுப்போகும் என்று தேவன் சொன்ன பின்பும் சில ஜனங்கள் தங்கள் தேவைக்கு அதிகமாக எடுத்தார்கள்.



ஓய்வு நாளைத்தவிர, முந்தய நாளில் எடுத்த மன்னா நிச்சயமாக நாற்றமெடுத்தது -- விசேஷித்த ஓய்வு நாளில் ஜனங்கள் ஓய்வு எடுத்து, முந்தின நாள் மன்னாவை சாப்பிட்டார்கள்.




இஸ்ரவேலரை தேவன் வனாந்தரத்தில் பார்த்துக்கொண்டார்.
அவர்களுக்கு உணவையும், தண்ணீரையும் - - கொடுத்து பகைவர்களிடமிருந்து பாதுகாத்துக் கொண்டார்.


அமலேக்கியர்கள்
அவர்களுடன்
யுத்தம் பண்ண
வந்தபோது, ...
... மோசே தேவனுடைய
கோலை உயர்த்தி பிடித்த
போதெல்லாம்
வெற்றி பெற்றுக்
கொண்டேயிருந்தார்கள்.



"நீங்கள் என்னுடைய சத்தத்துக்கு கீழ்ப்படிந்து நடந்தால் என்னுடைய விசேஷித்த ஜனமாயிருப்பீர்கள்," என்று தேவன் இஸ்ரவேல் ஜனங்களுக்குச் சொன்னார். "தேவன் சொன்ன எல்லாவற்றையும், நாங்கள் செய்வோம்," ஜனங்கள் மோசேயிடம் கூறினார்கள். சீனாய் மலையின் அடிவாரம் வந்தபோது மோசே தேவனைச் சந்திக்கப்போனான். அவர்கள் காத்திருந்தார்கள்.



மோசே
மலையிலே
தேவனுடன்
நாற்பது
நாட்கள்
இருந்தான்.
தேவன் இரண்டு
கற்பலகைகளிலே பத்து
கற்பனைகளை
எழுதினார்.



என்னுடைய
ஜனங்கள்
எப்படி வாழ
வேண்டுமென தேவன்
மோசேயினிடத்தில்
சொன்னார்.

1. "என்னையன்றி
   உனக்கு வேறே
   தேவன்
   உண்டாயிருக்க
   வேண்டாம்."
2. "விக்கிரகங்களை
   உண்டு
   பண்ணவும்
   வேண்டாம்."
3. "உன்
   தேவனுடைய
   நாமத்தை
   வீணிலே
   வழங்கவேண்டாம்."
4. "ஒய்வு நாளை
   நினைப்பாயாக.
   அதை
   பரிசுத்தமாய்
   கடைபிடி."

5. "உன்னுடைய
   தாயையும்,
   தகப்பனையும்
   கனம்
   பண்ணுவாயாக."

6. "கொலை செய்யாதிருப்பாயாக".

7. "விபச்சாரம் செய்யாதிருப்பாயாக."

8. "களவு செய்யாதிருப்பாயாக."

9. "பொய் சொல்லாதிருப்பாயாக."

10. "இச்சியாதிருப்பாயாக."



மோசே சீனாய்
மலையிலே
தேவனோடு இருந்த
போது இஸ்ரவேல்
மக்கள் பயங்கரமான
ஒரு காரியத்தை
செய்தார்கள்.
ஆரோனை ஒரு
பொற்கன்று குட்டியை
உருவாக்கச்சொல்லி - -
தேவனுக்குப் பதிலாக
அதனை
வழிபடத்தொடங்கினார்
கள். தேவன்
கோபப்பட்டார்.
மோசேயும் அப்படியே.



மோசே கன்று
குட்டியையும்,
ஜனங்கள்
நடனமாடியதையும்
கண்ட போது, அவன்
கற்பலகைகளை
தரையிலே போட்டு
உடைத்தான்.
கோபத்துடன் அந்த
பொற்கன்று குட்டியை
அழித்துப்போட்டான்.
அதை வழிபட்ட
துஷ்டமனிதர்களையும்
கொன்றுபோட்டன்.

அந்த இரண்டு
கற்பலகைகளையும்
மாற்றிக் கொடுத்தார்.
அவர் மோசேயினிடத்தில்
ஆசரிப்புக்கூடாரத்தை - சுற்றிலும்
அடைக்கப்பட்ட ஒரு கூடாரம் - அங்கே
தேவன் மக்களோடு வாசம்பண்ணும்
இடம் உண்டு பண்ணச் சொன்னார்.
அங்கே அவர்கள் தேவனை வழிபட
வேண்டும். மேகஸ்தம்பமும்,
அக்கினிஸ்தம்பமும்
தேவன்
அவர்களோடு



இருக்கிறார்
என்று
வெளிப்படுத்தியது.

அவர்கள் கானான் தேசத்துக்கு அருகாமையில் வந்தபோது, மோசே பன்னிரெண்டு வேவுகாரர்களை அனுப்பி தேவன் தங்களுக்கு வாக்குத்தத்தம் பண்ணின தேசத்தை பார்த்து வரச்சொன்னான். அவர்கள் எல்லோரும் அது அழகான தேசம் என்று ஒத்துக்கொண்டாலும்!



யோசுவா மற்றும் காலேப் என்ற இரண்டு பேரையும் தவிர, தேவனுடைய பலத்தினாலே வெற்றி பெறமுடியும் என்று வேறுயாரும் நம்பவில்லை.



மற்ற பத்து வேவுகாரரும் அந்தப்
பலமான பட்டணங்களையும்,
பயங்கரமான மக்களையும்
அங்கு கண்டு பயப்பட்டார்கள்.
"அந்த தேசத்தை
நம்மால் எடுக்க
முடியாது,"
என்று
புலம்பினார்கள்.



அவர்களை
எகிப்திலிருந்து
விடுதலை செய்ய
தேவன் செய்த வல்லமையான
காரியங்களை
மறந்துவிட்டார்கள்.

விசுவாசியாத பத்து வேவுகாரர்களை ஜனங்கள் பின்பற்றினார்கள். அவர்கள் அழுது, எகிப்திற்கு திரும்பிப் போக தயாரானார்கள். அவர்கள் மோசேயைக் கொல்லப் பார்த்தார்கள்!



தேவன் மோசேயின் வாழ்க்கையைக் காப்பாற்றினார். பின்பு அவர் ஜனங்களைப் பார்த்து சொன்னார், "நாற்பது வருடங்கள் நீங்கள் வனாந்தரத்திலே சுற்றித்திரிவீர்கள். காலேபும், யோசுவாவும், மற்றும் உங்கள் பிள்ளைகள் மாத்திரம் நீங்கள் வேண்டாமென்ற தேசத்திற்கு செல்வார்கள்," என்றார்.



நாற்பது வருடங்கள்

தேவனுடைய வார்த்தையாகிய
வேதாகமத்திலிருந்து ஒரு கதை

காணப்படுமிடம்

யாத்திராகமம் 15
முதல் எண்ணாகமம் 14

“தேவனுடைய வார்த்தை உட்பிரவேசிக்கும் போது
வெளிச்சம் கொடுக்கிறது.” சங்கீதம் 119:130

முற்றும்

இந்த வேதாகம கதைகளானது நம்மை படைத்த மற்றும் நீங்கள் அவரை அறிந்து கொள்ள வேண்டுமென்கிற அற்புதமான தேவனைப் பற்றியதாகும்.

நாம் அநேக தவறுதல்களைச் செய்திருக்கிறோம் என்று தேவனுக்குத் தெரியும். அவர் அதை பாவம் என்று கூறுகிறார். பாவத்திற்கு தண்டனையோ மரணம் ஆனால் தேவன் நம்மை அதிகமாக நேசிப்பதினாலே, தன்னுடைய சொந்த குமாரனாகிய இயேசுவை அனுப்பி, நம்முடைய பாவங்களுக்காக அவரை சிலுவையில் மரணமடையச் செய்தார். பின்பு இயேசு உயிருடன் எழும்பி பரலோக வீட்டிற்குச் சென்றார். நீங்கள் இயேசுவை விசுவாசித்து, உங்களுடைய பாவங்களுக்கு மன்னிப்பு கேட்டால் அவர் அதைச் செய்வார். அவர் இன்றே உங்களிடத்தில் வந்து உங்களில் வாசம் பண்ணுவார், நீங்களும் என்றென்றும் அவரோடு வாசம் பண்ணுவீர்கள்.

இது உண்மையானது என்று நீங்கள் நம்பினால், பின்வரும் வாக்கியங்களை தேவனிடத்தில் சொல்லலாம். பிரியமுள்ள இயேசு, நீர் தேவனென்று நான் நம்புகிறேன், எனக்காக நீர் மனிதனாக வந்து என்னுடைய பாவங்களுக்கு மரித்து, இப்போது நீர் மறுபடியும் உயிரோடிருக்கிறீர். தயவு செய்து எனக்குள்ளே வாரும், என்னுடைய பாவங்களை மன்னியும், அதினாலே இன்று ஒரு புதிய வாழ்க்கையை நான் பெற்று, ஒரு நாளில் நான் உம்மோடு என்றென்றும் இருக்க உதவி செய்யும். உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். உம்முடைய பிள்ளையாக உமக்கு கீழ்ப்படிந்து நடக்க உதவி செய்யும். ஆமென்.

வேதாகமத்தை தினந்தோறும் வாசித்து தேவனிடம் பேசுங்கள் யோவான் 3:16